## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் காரணமாக ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழுவின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான

நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ''முறையாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்கீட்டு நியமம் 16 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | | |
| (i) | ஆணைக்குழுவின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி, கிரயமான ரூபா 13,272,142,850 தொகையில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் நியாயமான பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. ஆணைக்குழுவிற்கு உரியதாகக் காண்பிக்கப்பட்டுள்ள 45,000,000 பெறுமதியான 112 ஏக்கர் 01 ரூட் 10.5 பேர்ச் அளவினை உடைய காணி ஒன்று அண்ணளவாக 50 சதவீத அளவு கட்டான பிரதேச செயலத்தினால் கைப்பற்றப்பட்டிருக்கும் போது அது தொடர்பாகக் கவனத்திற் கொள்ளாமல் காணியின் மொத்தக் கிரயமும் மேற்கூறப்பட்ட பெறுமதியில் உள்ளடங்கி இருந்தது. | சகல நிலையான சொத்துக்களும்ளும் மீள் மதிப்பிடப்பட்டு நியாயமான பெறுமதியில் எதிர்வரும் வருடத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதியை கணக்குகளில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 15,192,644 கிரயமான நிலையான சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம் அந்த சொத்துக்கள் மீள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சகல நிலையான சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதியில் எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதியின் கீழ் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கணக்கீட்டு நியமம் 37 இல் ஒதுக்கீடுகள் நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க விடயங்கள் | | |
| | 03 நிறுவனங்களினால் முறையே ஒழுங்கமைக்கப்பட்ட அலைவரிசை செயற்திட்டங்களை அமுல்படுத்தாமை மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையை மீறியதன் அடிப்படையில் ரூபா 62,146,612,000 கூட்டுத்தொகையான நட்டஈடு கோரி ஆணைக்குழுவிற்கு | இந்த வழக்குத் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய இழப்பீட்டுப் பணத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி நிதிக்கூற்றுக்களில் |

| | | |
|---|---|---|
| எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது. சேவையினை மீறியமை மற்றும் தொலைத்தொடர்பு நிலையத்திற்கு பாதிப்பு ஏற்பட்டமை தொடர்பாக ஆணைக்குழுவிற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தொடர்பில் ரூபா 14,800,000,000 நட்டஈட்டுத் தொகையொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெறுமதியான ரூபா 14,800 மில்லியன் தொகையை குறிப்பிடுவதற்கு முடியாதிருந்தது. | வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தாமரைக் கோபுர செயற்திட்டத்தின் தாமதத்திற்காக அறவிடப்பட்ட கட்டணத் தொகை ரூபா 1,680,544,180 தொகை ஏனைய வருமானமாக கணிப்பிடப்பட வேண்டிய போதிலும், தாமரைக் கோபுர தாமதக் கட்டணமாக நடைமுறைப்பொறுப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக அதற்காக நாணயமாற்று நட்டம் கணிப்பிடப்பட்டு ரூபா 226,998,520 தொகையும் அக்கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட ஆலோசனையாளர்களான மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள சிபாரிசு விடயங்களுக்கு இணங்க எதிர்காலத்தின் போது செயற்திட்டத்தின் காலத்தை நீடித்தலுக்காக (BOT) அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக வரைவுத் தொகையாக “Delay Damages” நடைமுறைப் பொறுப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் ஆண்டின் இறுதியின்போது வெளிநாட்டுப் பணம் உள்நாட்டு காசாக மாற்றும் போது அத்திகதியில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தின் பிரகாரம் நாணயமாற்று நட்டம் கணிப்பிடப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 21 இன் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தாமதக் கட்டணம் நடைமுறைப் பொறுப்பின் கீழ் உள்ளடக்கிதற்கு காரணமாக இருந்த விடயங்களை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஒக்தோபர் 24 முதல் 2019 ஒக்தோபர் 23 வரையான ஆண்டிற்காக Oracle Database Support சேவை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்காக ரூபா 1,924,800 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2019 சனவரி 01 முதல் 2019 | 2019 ஆம் ஆண்டின் நிதி அறிக்கைகளை தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆட்டுறு அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்படுகின்றமை யால் 2019 சனவரி முதல் 2019 ஒக்தோபர் வரையிலான மாதங்களுக்குரிய செலவினங்கள் முற்கொடுப்பனவாக |

| | | | |
|---|---|---|---|
| | ஒக்தோபர் 23 என்ற காலப்பகுதிக்குரிய பெறுமதியாக ரூபா 1,560,934 தொகை முற்கொடுப்பனவாக கணக்குகளில் இனங்காணப்பட்டிருக்கவில்லை அதன் பிரகாரம் அந்த எண்ணிக்கையால் ஆண்டின் இலாபம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | இனங்காணப்பட வேண்டும் |
| (இ) | 2018 செப்தெம்பர் 01 முதல் 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை மின் உயர்த்தியின் சேவைகளை நிறைவேற்றுவதற்காக 2018 நவம்பர் 30 ஆந் திகதி ரூபா 560,955 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2019 சனவரி 01 முதல் 2019 ஆகஸ்ட் 31 வரையிலான காலப்பகுதிக்குரிய ரூபா 373,458 தொகை முற்கொடுப்பனவாக கணக்குகளில் இனங்காணப்பட்டிருக்கவில்லை அதன் பிரகாரம் அந்த எண்ணிக்கையால் ஆண்டின் இலாபம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் நிதி அறிக்கைகளை தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2019 சனவரி முதல் 2019 ஆகஸ்ட் வரையிலான மாதங்களுக்குரிய செலவினங்கள் முற்கொடுப்பனவாக இனங்காணப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| | **விடயம்** | **நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி** | **நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி** | **வேறுபாடு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்கும் பொருளாதார சேவை கட்டண வரிக்கும் கீழான புரள்வு | 11,811,272,245 | 11,845,891,066 | 34,618,821 | இந்த வேறுபாட்டை இனங்காண்பதற்காக இணக்கக் கூற்று தயாரிப்பதறகு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் எதிர்வரும் வருடங்களின் போது இந்த இணக்கக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை | அவதானிப்பில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட புரள்வும் காசு அடிப்படையில் சீராக்கப் பட்டமையால் வேறுபாட்டிற்கு காரணம் என்ன என அறிக்கையிடப் பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | எடுக்கப் படுகின்றது. | |
| (ஆ) | பெறுமதிசேர் வரி கட்டுப்பாட்டு கணக்கின் மீதி | 223,392,670 | 238,629,877 | 15,237,207 | உரிய வேறுபாட்டை அவதானிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுகின்றது. | வேறுபாட்டிற்கான காரணத்தைக் கண்டறிந்து சீராக்கப்பட வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| திறைசேரி வைப்புக்கள் | ரூபா 354,000,000 | முதலீட்டுச் சான்றிதழ் பத்திரம் | இந்த முதலீடு தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடி உரிய கோவையை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொக்காவில் அண்டென்னா மற்றும் ட்ரன்ஸ்மிசன் கோபுரத்தைப் பயன்படுத்துகின்ற 04 செயற்பாட்டாளர்களிடமிருந்து 2012 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய குத்தகைப் பணத்தை அறவிடுவதற்கு உடன்படிக்கை செய்யப்படாதிருந்ததுடன் உடன்படிக்கை செய்யப்பட்ட லங்கா பெல் நிறுவனத்தின் ஒரு செயற்படுத்துனரிடமிருந்து ரூபா 334,293 தொகை 2019 மே 15 ஆந் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படாத நான்கு செயற்படுத்துனர்களின் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் லங்கா பெல் கம்பனிக்கு உரிய கொடுப்பனவு செய்யப்பட்டதாக 2018.06.18 ஆந் திகதி மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | பணத்தை அறவிடுவதற்காக உரிய முறைமையொன்று அறிமுகப்படுத்த வேண்டும். |
| (ஆ) | இந்த கோபுரத்தைப் பயன்படுத்துகின்ற செயற்படுத்துனர்களிடமிருந்து 2012 சனவரி முதல் 2018 | ஆணைக்குழுவினால் SLBC/SLRC மற்றும் ITN என்ற நிறுவனங்களுக்கு இந்த நீண்டகாலமாக | பணத்தை அறவிடுவதற்காக உரிய முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | நவம்பர் 30 ஆந் திகதி வரை அறவிட வேண்டிய மின்சாரப் பட்டியல் பெறுமதியில் ரூபா 75,463,256 தொகை 2019 மே 15 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்தப் பணம் செலுத்தப்படாமை தொடர்பாக செயற்படுத்துனர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொண்டுவரப்படுகின்ற மின்சாரப் பட்டியல்களுக்காக அறவிட வேண்டியிருந்த தொகையைச் செலுத்துமாறு பல தடவைகள் அறவித்திருந்த போதிலும் அவர்கள் அது தொடர்பாக எந்தவித பதிலும் காண்பித்திருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மீதி ரூபா 1,661,523,593 ஆக இருந்ததுடன் அதிலுள்ள 02 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 373,504,055 ஆகும். கடன்பட்டோர் வகைப்படுத்தலின் பிரகாரம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட சகல கடன்பட்டோர்களும் இந்த தொகுதியில் உள்ளடக்கப்பட்டிருந்ததால் அந்த கடன்பட்டோரின் வயது பகுப்பாய்வுகள் சரியான முறையில் அடையாளம் காண முடியவில்லை என்பதுடன் 07 வருடங்கள் முதல் 30 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தொட்டு காணப்படுகின்ற 10 நிலுவைகளில் ரூபா 1 மில்லியனுக்கு கூடுதலான கூட்டுத்தொகை ரூபா 302,858,443 மீதியும் இந்த மீதியும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | 02 வருடங்களுக்கு மேற்பட்ட சகல கடன்பட்டோர்களினதும் குறித்த வயது தொகுதியின் படி வகைப்படுத்தப்பட்ட கடன்பட்டோர்களின் காலப்பகுப்பாய்வை சரியாக இனங்காணக்கூடிய வகையில் காண்பிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | கடன்பட்டோரின் குறித்த வயது தொகுதியின் பிரகாரம் வகைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அறவிடப்படாது காணப்படுகின்ற மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 வரையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 145,254,449 ஆக இருந்ததுடன் அதில் 1981 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற மீதியும் உள்ளது. | இதனை அறவிடுவதற்காக ஆணைக்குழு தீர்மானத்தின் பிரகாரம் ஊடகத்துறை செயலாளர் அவசரமாக முன்வருமாறு கோரி அதிமேதகு சனாதிபதிக்கு பிரதியுடன் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | கடன்பட்டோரிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்டிருந்த அலைவரிசை | மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தை மேலும் பகுப்பாய்வு செய்து | மேலதிகமாக அறவிடப்பட்ட பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதிப்பத்திரக் கட்டணத் தொகையான ரூபா 2,129,435 தொகையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்குரியதாக எடுக்க முடியுமான நடவடிக்கைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் கீழ் எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஊ) | 2011 இன் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்பு வரிச் சட்டத்தின் பிரகாரம் தொலைத்தொடர்பு வரி அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டியிருந்த போதிலும், 03 நிறுவனங்களால் குறித்துரைத்த பிரகாரம் வரித்தொகை மற்றும் மிகைக்கட்டணம் செலுத்தாதிருக்குமாயின் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் போது ஒரு நிறுவனத்திடமிருந்து ரூபா 6,358,657 தொகை மற்றும் மேலும் ஒரு நிறுவனத்திலிருந்து ரூபா 1,267,758 தொகை மாத்திரம் அறவிட வேண்டியதாக கணிப்பிடக்கூடியதாக இருந்தது. | LCSN நிறுவனத்திலிருந்து வரித் தொகையை அறவிடுவதற்கு தேவையான சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் ஏனைய நிறுவனங்களிலிருந்து வரித் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தொலைத்தொடர்பு வரிச் சட்டத்தின் படி குறித்த பிரகாரம் வரி மற்றும் மிகைக்கட்டணம் அறவிடப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

---

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் மற்றும் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | உழைக்கும் போதே செலுத்தும் வரி உரிய உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணானதாக | உழைக்கும் போதே வரி செலுத்துதல் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. எனினும் இந்த உத்தியோகத்தர்களிடமிருந்து கழிக்கப்படுகின்ற அந்த உழைக்கும் போதே செலுத்தும் வரி | 2006 இன் 1 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் பிரகாரம் உழைக்கும் போதே செலுத்தும் வரி உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து கழிக்கப்பட்டு உள்நாட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து ரூபா 7,404,781 தொகை முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் செலுத்தப்பட்டிருந்தது | ஆணைக்குழுவினால் உத்தியோகத்தர்களுக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு உழைக்கும் போதே செலுத்தும் ஊழியர்களிடமிருந்து கழித்து மீளளிப்புச் செய்தல் சட்டரீதியான நிலைபற்றி சட்டமா அதிபர் திணைக்களத்தில் விசாரிக்கப்பட்டது. அதன் போது உழைக்கும் போதே செலுத்தும் வரி ஊழியர்களுக்கு மீண்டும் மீளளிப்புச் செய்தல் சட்டரீதியான தடையொன்று காணப்படாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த பதில் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதி PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14.2 ஆம் பிரிவு | ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஊடாக திறைசேரி செயலாளரின் இணக்கப்பாடு பெறப்பட்டிருக்க வில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் திருத்தி 2019 ஆம் ஆண்டின் போது முறையாக பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2003 யூன் 02 ஆந் திகதி PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14.2 ஆம் பிரிவின் பிரகாரம் திறைசேரியின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 757(2) | ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய் வொன்று மேற்கொண்டு உரிய அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | கருத்துரை தெரிவித்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 757(2) இன் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு உரிய பிரகாரம் மேற்கொண்டு குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்து சேவைகள் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தி | அரசாங்க கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் பதவியணியினர்களுக் காக சம்பளம் மற்றும் படிகளைத் தீர்மானிக்கும் போது சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் என்பன பெறப்பட வேண்டும். எனினும், அந்த பரிந்துரை மற்றும் அங்கீகாரமின்றி ஆணைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் உள்ளக சுற்றறிக்கைகளுக்கு இணங்கவும் பதவியணியினருக்கு ஊக்குவிப்புப் படி, மிகையூதியப் படி மற்றும் வீட்டு வாடகையாக மீளாய்வாண்டின் போது ரூபா 91,859,110 தொகை செலுத்தப்பட்டிருந்த. | சம்பளம் மற்றும் படிகளைத் தீர்மானிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு 1996 இன் 22 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்த) சட்டத்தின் மூலம் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டிருந்ததுட ன் சட்டமா அதிபரினால் 2007.08.15 ஆம் திகதிய E/164/07/TRC ஆம் இலக்க மற்றும் 2007.09.24 ஆந் திகதிய E/164/07/TRC ஆம் இலக்க கடிதங்கள் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | படிகள் மற்றும் சம்பங்களைச் செலுத்தும் போது சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (உ) | 2007 யூன் 01 ஆந் திகதிய என்எஸ்சீசீ/3/ஏபீ சீ/24 ஆம் இலக்க சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவி ன் கடிதம் | பதவிநிலைத் தரமல்லாத பதவியணியினருக்கா க ரூபா 2,000 மாதாந்தம் போக்குவரத்துப் படியாகச் செலுத்த வேண்டியிருந்த போதிலும், ரூபா 6,000 வீதம் மீளாய்வாண்டில் ரூபா 11,808,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது அதன் பிரகாரம் ரூபா 7,872,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது | இந்த ஆணைக்குழுவின் பதவியணியினர்களுக்காக செலுத்தப்பட்டுள்ள படிகள் இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்த) சட்டத்தின் 22C(2) ஆம் பிரிவின் பிரகாரம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் படி செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே சட்டமா அதிபரின் 2007.08.15 ஆம் திகதிய E/164/07/TRC ஆம் இலக்க மற்றும் | பரிந்துரை செய்யப்பட்ட படிகளை மாத்திரம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

2007.09.24 ஆந் திகதிய E/164/07/TRC ஆம் இலக்க கடிதங்கள் மூலமும் மேலும் அது தொடர்பான இணக்கப்பாடு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 45,706,552,824 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 53,576,471,208 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 7,869,918,384 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம், தொலைத்தொடர்பு வரி வருமானம், தொலைத்தொடர்பு அபிவிருத்தி கட்டண வருமானம் மற்றும் வெளியே செல்கின்ற உள்நாட்டு நுழைவுக் கட்டணத்தின் அடிப்படையிலான வருமானம் (Levy on outgoing local access charges) ரூபா 6,335,108,677 இனால் குறைவடைந்தமை மற்றும் ஸ்மார்ட் போன் (Smart Phone) பாவனை மற்றும் ஓவர் த டொப் (Over - the - Top) இலவசமாக பயன்படுத்தக்கூடிய மொபைல் அப்லிகேசன் பயன்பாடு மற்றும் அரசாங்கத்தின் வரிக் கொள்கையிலுள்ள மாற்றங்களும் இதற்கான பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன. அதற்கு மேலதிகமாக ரூபாயின் பெறுமதி மிகவும் வேகமாக குறைவடைந்தமையினால் அந்நிய செலவாணி கொடுக்கல் வாங்கல்களிலான நட்டம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 1,545 மில்லியனால் உயர்வடைந்து சென்றமை மற்றும் மிகையூதியப்படி செலவினம் 50 சதவீதத்தால் உயர்வடைந்தமையும் இதற்கான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் நோக்கமிடப்படாத பணியான திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நாடகங்களை தயாரித்தலுக்காக முறையே ரூபா 32,192,177 தொகை மற்றும் 7,160,400 தொகை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன் திரைப்படத்திற்காக செலவிடப்பட்ட தொகையில் ரூபா 26,400,000 மாத்திரம் திரைப்பட பணிப்பாளரினால் 2018 சனவரி 12 ஆந் திகதியளவில் மீளச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 5,782,177 தொகையொன்றை அறவிடுவதற்கு எஞ்சியிருந்தும் திரைப்பட உற்பத்தி பிரிவிற்கு அறவிடமுடியாதிருந்த மற்றும் தொலைக்காட்சி நாடகத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 12,952,577 கூட்டுத்தொகையான பணம் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆணைக்குழுவினால் இவ்வாறு செலவிடப்பட்ட பணத்தை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளின் எதிர்கால வழிமுறைகள் தொடர்பாக தீர்மானிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் தற்போது அந்தக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆணைக் குழுவின் நோக்கங்களுக்குப் புறம்பான பணிகளை மேற்கொள்வதற்கு ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியிருந்தமையால் அணைக்குழு ஏற்பட்ட நட்டம் தொடர்பான ஆணைக் குழுவுக்கும் பொறுப்பாக இருப்பதுடன் நட்டங்களை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதை துரிப்படுத்த வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட எனினும் அமுல்படுத்தப்படாத "Net Safe Child Protection" நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டின் போதும், ரூபா 10 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஆணைக்குழு அங்கீகாரம் கிடைக்காதிருந்ததுடன், செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக வடிகட்டல் பொறிமுறை (Filtering Mechanism) மூலம் இணையத்தளத்தின் இணையத்தைக் கட்டுப்படுத்துவதற்காக முறைமையினைத் தயாரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும், 2019 ஏப்ரல் 09 வரையிலும் அந்த முன்தொழிவையும் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | வடிகட்டல் முறை மூலம் இணையத்தளத்தைக் கட்டுப்படுத்துவதற்கு முறைமையொன்றைத் தயாரித்தல், ஆணைக்குழுவால் எடுக்கப்பட்ட முன்மொழிவு மாத்திரமாகும். | நிகழ்ச்சித் திட்டத்திற்காக நிதிஏற்பாட்டை ஒதுக்குவதற்கு முன்னர் நிகழ்ச்சித் திட்டத்திற்கான அங்கீகாரம் பெற வேண்டியிருந்ததுடன் இணையத்தளம் மூலம் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | போதியளவான தொழில்நுட்ப உத்தியோகத்தர் இல்லாமையின் காரணமாக 2016 ஆம் ஆண்டின் போது பிற்போடப்பட்டிருந்த அலைவரிசை கண்காணிப்பு முறைமை தானியங்கும் முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல் என்ற நிகழ்ச்சித்திட்டம் மீளாய்வாண்டின் போதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அலைவரிசை கண்காணிப்பு முறைமையொன்றைத் தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைகள் குழு என்பவற்றை நியமிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுகை வகையில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் துறை தொடர்பான தொழில்நுட்ப அறிவுள்ள உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்துகின்ற பாவனையாளர்களை பாதுகாக்கும் வகையில் "தேசிய உபகரணங்களை இனங்காணும் | தேசிய உபரகணங்களை இனங்காணும் பதிவேடு (National Equipement Indentity Register) தயாரிக்கும் | திட்டங்களின் பிரகாரம் செயற்பட எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதிவேடு" (National Equipement Identity Register) தயாரிப்பதற்காக 2014 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் உரித்தாக இருந்த போதிலும், போலியாக தொலைபேசி சந்தையில் அதனைத் தடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் 2018 ஆம் ஆண்டின் போதும் அமுல்படுத்தப்படவில்லை. | செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தேவையான நிதிஏற்பாடு 2019 இன் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பாதீட்டில் உள்ளடக்கப் பட்டிருந்ததுடன் அந்த பணிக்காக தேவையான வேலை நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | |
| (ஈ) | இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் தொலைபேசி பரிவர்த்தனை கோபுரங்கள் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட 2010 மற்றும் 2017 வழிகாட்டியை சட்டமாக வெளியிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆணைக்குழு தவறியிருந்தது. | தொலைபேசி கோபுர வழிகாட்டியொன்றை சட்டமாக செயற்படுத்துதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | தொலைபேசி பரிவர்த்தனை கோபுரங்கள் தொடர்பான வழிகாட்டியை சட்டமாக செயற்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபரகணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிர்மாண ஒப்பந்த பெறுமதி ரூபா 2,494 மில்லியன் தொகையான தொலைத்தொடர்புகள் ஊடாக நிலையத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2014 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 2016 யூலை மாதம் அளவில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. இந்த செயற்திட்டம் 2016 யூன் 23 ஆந் திகதியளவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்த செலவினம் ரூபா 684 மில்லியனாக இருந்தமையால் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாத இந்தக் கட்டிடம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் விளைவற்றுக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்ப பூங்காவில் அரைவாசி பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடத்தை பொருத்தமான கொடுப்பனவு முறையின் கீழ் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற முதலீட்டாளர் ஒருவரை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | விளைவற்றுக் காணப்படுகின்ற கட்டிடத்தை முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது அமுல்படுத்தப்படாத ரூபா 1,856,798,710 பெறுமதியான 32 பெறுகை செயற்பாடுகள் காணப்பட்டதுடன் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களில் ஆண்டின் போது 11 பெறுகை செயற்பாடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | புதிதாக கொள்வனவுகளை தேவையற்றது என பின்னர் இனங்காணல், சிக்கலான தகவல் தொழில்நுட்ப முறைமையாக இருந்தமை, நிதி அமைச்சின் நியதிகளின் பிரகாரம் மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்தல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை போன்ற பல்வேறு காரணங்களினால் பெறுகைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 21 விடயங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருக்கின்றது. | திட்டத்தை தயாரிக்கும் போது, தேவையினை சரியான இனங்கண்டு அதன் பிரகாரம் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் இயலுமான வரை திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாமல் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட 10 பெறுகைகள் காணப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 3,376,754 ஆகும். | 2018 ஆம் ஆண்டிற்குரிய பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த சில பெறுகை பணிகளின் அவசர தேவையினைக் கவனத்தில் கொண்டு பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பெறுகைத் திட்டத்திற்கு புறம்பாக கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெறுகைத் திட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **தாமரைக் கோபுர செயற்திட்டம்**<br>2010 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 10/2473/401/031 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தாமரைக் கோபுர நிர்மாண ஒப்பந்தம் 02 சீனக் கம்பனிகளுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2012 சனவரி 03 ஆந் திகதி தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவும் அதன் தொகுதியும் ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தன. ஒப்பந்த பெறுமதி ஐ.அ.டொலர் 104,300,000 தொகையாக இருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரமும் 2012 நவம்பர் 12 முதல் 2015 மே 12 ஆந் திகதி வரை 912 தினங்களில் இந்த ஒப்பந்தம் பூர்த்தி செய்யவேண்டியதாகக் காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) 2011 திசெம்பர் 14 ஆந் திகதிய அமப/11/2262/501/026/ரீபீஆர் ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2.59 ஹெக்டேயார் காணி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு பல மீள் நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் செலவிடப்பட்ட கிரயம் மாத்திரம் அறவிடப்பட்டு காணியைக் கையளிப்பதற்கு இதுவரையும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக நகர அபிவிருத்தி அதிகாரசபை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிலிருந்து அமைச்சரவையின் தீர்மானத்திற்கு இணைந்ததாக அல்லாமல் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட ரூபா 11.7 பில்லியன் தொகையைச் செலுத்துமாறு கோரப்பட்டிருந்தது. | காணி ஆணைக்குழுவிற்கு கையளிக்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தாமரைக் கோபுர நிர்மாணத்தின் ஒப்பந்த காலம் முடிவடைந்ததன் பின்னர் 2015 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2K15.217.02(2) ஆம் இலக்க ஆணைக்குழுத் தீர்மானத்தின் பிரகாரம் ஒப்பந்த காலம் 2017 ஒக்தோபர் வரை நீடிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறோம். | மேலும் ஏற்படுகின்ற தாமதத்தை தவிர்த்து தாமரைக் கோபுரம் முதலீடு செய்யப்பட வேண்டிய செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஆலோசனைக் கட்டணமாக 12 தவணைகளில் அதாவது ரூபா 150,000,000 தொகை செலுத்தியதன் பின்னர் அந்தக் கொடுப்பனவுகளைக் கைவிட்டு ஆலோசனைக் கட்டணம் செலுத்தும் உடன்படிக்கை நிபந்தனை ஏற்பாடுகளுக்குப் புறம்பாக ஒப்பந்த மேற்பார்வைக்காக எனக் குறிப்பிட்டு மாதத்திற்கு ரூபா 3,000,000 வீதம் 2015 நவம்பர் மாதம் முதல் ஆலோசனைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு செலுத்துவதற்கு ஏற்பட்ட அடிப்படை விடயமாக செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் சரியான மேற்பார்வையின்றி மேற்கொள்வதற்கு சந்தர்ப்பளித்தமையால் ஏற்படக்கூடிய இழப்புக்களைத் தவிர்ப்பதற்கு என ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறோம். | உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் ஆலோசனைக் கட்டணத்தைச் செலுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஈ) | கொழும்பு தாமரைக் கோபுரத்தை ஆதன முகாமைத்துவ கம்பனிக்கு வாடகைக்கு வழங்குவதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக இதுவரையிலும் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை அங்கீகரித்த ஆதன முகாமைத்துவ செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக தொலைத்தொடர்பு சட்டத்தின் பிரகாரம் கம்பனியைத் தாபிப்பதற்கு தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு முடியாதிருந்ததாக சட்டமா அதிபர் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வரிசை | அமைச்சரவை அங்கீகாரத்தை துரிதமாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அமைச்சுடன் தாமரைக் கோபுர நிர்மாணத்தின் பின்னரான செயற்பாடுகள் தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு வந்து அந்த செயற்பாடுகளுக்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் மொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 298 ஆக இருந்த போதிலும், அங்கீகரிக்கப்படாத 02 பதவிகளுடன் உள்ளபடியான பதவியணியினர் 221 ஆக இருந்தமையால் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 79 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணியைத் திருத்துதல் மற்றும் அதன் பிரகாரம் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல் என்பன 2019 மார்ச் வரையிலும் பூர்த்தி செய்யப்படவில்லை. அவ்வாறே அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத இரண்டு உதவி கணக்காளர் பதவிகள் 2015 ஆம் ஆண்டு முதல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் அந்த பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018.12.31 ஆந் திகதியளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 298 ஆகவும், வெற்றிடங்கள் 79 ஆகவும் காணப்பட்டதுடன் சேவை தேவையின் அடிப்படையில் இந்த வெற்றிடங்களை நிரப்பும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவரையிலும் புதிய பதவியணிகளின் தேவை, நிறுவகக் கட்டமைப்பு, ஆட்சேர்ப்பு நடைமுறை என்பவற்றைத் திருத்திக் கொண்டிருந்ததுடன் அதற்கான அங்கீகாரத்திற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் 02 உதவிக் கணக்காளர் பதவிகளுக்காகவும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அத்தியாவசிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல் மற்றும் நிறுவகக் கட்டமைப்பு, மற்றும் ஆட்சேர்த்தல் விதித் தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்களைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டும் எனவும் உதவி கணக்காளர் பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) உள்ளபடியான பதவியணியினரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இரண்டாம் நிலை அடிப்படையில் 08 உத்தியோகத்தர்களும், ஒப்பந்த அடிப்படையில் 28 உத்தியோகத்தர்களும் 2018 | பதவியணியினரின் வெற்றிடங்களை நிரப்பும் முறைமையொன்று ஆணைக்குழுவை நியமிக்கும் விதித் தொகுதியினதும் ஆணைக்குழுச் | இரண்டாம் நிலை அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களின் சேவையை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். | சட்டத்தினாலும் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரமும் தீர்மானிக்கப்பட்டுகின்றது. அதன் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் 28 பேரும் இரண்டாம் நிலை அடிப்படையில் 08 பேரும் அத்தியாவசிய பதவிகளுக்காக நியமிக்கப்பட்டிருந்தனர். | முடியாதிருந்த மையினால் பதவியணியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரமும் 2011 திசெம்பர் 11 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்துள்ள பதவியணியினரதும் சிரேஷ்ட தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 04 ஆக இருந்த போதிலும், ஆணைக்குழுவின் தீர்மானத்தில் சிரேஷ்ட தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 09 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை 04 முதல் 09 வரை அதிகரித்துக்கொள்வதற்கு 2016.04.26 ஆந் திகதிய 2K16.224.08(2) ஆம் இலக்க ஆணைக்குழுத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2016.07.26 ஆந் திகதிய 2K16.227.10(11) ஆம் இலக்க ஆணைக்குழுத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த உத்தியோகத்தர்களை சிரேஷ்ட தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் பதவிக்கு பதவியுயர்த்துவதற்கு ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட அளவிற்கு மேலதிகமாகவுள்ள பதவிகளின் எண்ணிக்கைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

**3.7 வாகன முறைமை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவிற்குச் சொந்தமாகக் காணப்பட்ட 29 வாகனங்களுக்கிடையே 05 வாகனங்கள் 2018 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் இந்த வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் | 2019 ஆம் ஆண்டின் போது அந்த ஏலமிடல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்கு முடியுமான வகையில் இதுவரையிலும் புதிய குழுவொன்றை நியமித்து உரிய | வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும், ஏலமிடல் ஆண்டின் போது இடம்பெற்றிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) | விற்றுத்தீர்க்கப்பட வேண்டிய வாகனங்களில் 03 வாகனமும் அலைவரிசை வடிவமைக்கப்பட்ட வாகனங்களாக இருந்தமையால் அலைவரிசை செயன்முறை நடவடிக்கைகளை செய்து கொள்வதற்கு இது தடையாகக் காணப்பட்டது. | 03 அலைவரிசை செயன்முறை வாகனங்கள் மூலம் அலைவரிசை செயன்முறை நடவடிக்கைகளைச் செய்யும் போது இடையூறு ஏற்பட்டிருந்ததாக உரிய தொழில்நுட்ப பிரிவின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் ஓடமுடியாத வாகனங்கள் மூலம் மேலும் செயன்முறை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதாகையால் புதிய வாகனங்கள் மூலம் அலைவரிசை செயன்முறை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், புதிய வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | புதிய வாகனங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவினால் 2018 ஆம் ஆண்டிற்காக அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த மனிதவள முகாமைத்துவம் செய்யும் கணனிமயப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம், களஞ்சியக் கட்டுப்பாட்டிற்கான கணனி மயப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நீதிமன்ற கட்டளை மற்றும் ஆவணங்கள் என்பவற்றை டிஜிட்டல்மயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஆண்டின் | 2018 ஆம் ஆண்டின் இறுதி அரை வரையிலும் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவு உரிய பிரகாரம் ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் எரிய பெறுகைகளை செய்வதற்குரிய தேவையான வழிகாட்டிகளைப் பெற்றுக்கொள்ளுதல் கஷ்டமாக இருந்தமையால் உரிய | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதேனும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை நடவடிக்கைகள் சரியான பிரகாரம் மேற்கொள்ளப்படவில்லை. | |
| (ஆ) | ஆண்டின் போது மேற்கொள்வதற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 16 பணிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அதன் முன்னேற்றம் 5 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை காணப்பட்டது. இதில் 25 சதவீதம் மற்றும் அதற்குக் குறைந்த செயல் முன்னேற்றத்தைப் பெற்ற 03 பணிகள் 50 சதவீதம் மற்றும் அதற்கு குறைவான செயல் முன்னேற்றத்தைப் பெற்ற 05 பணிகள் என்பன காணப்பட்டன | உரிய பணிகள் தொடர்பான முன்னேற்றத்தைப் பெறாமை தொடர்பாக உரிய பிரிவின் தலைவரின் விசேட கவனத்திற்கு செயல்முன்னேற்றம் மீளாய்வாண்டின் போது அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது முன்னைய ஆண்டின் செயல்முன்னேற்றத்தை பெறமுடியாதிருந்த செயற்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி செயலாற்றலை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக உதவியைப் பெற்று தொலைத்தொடர்பு துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு முன்னைய ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் அதற்காக ரூபா 1.5 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கிடப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது எந்தவொரு செலவினமும் செயற்படாதிருந்த போதிலும் அதன் செயல்முன்னேற்றம் 50 சதவீதம் என நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. | தொலைத்தொடர்பு ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்குரியதான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டு இந்த செயற்பாடுகள் தொடர்பில் செயல்முன்னேற்றம் பெறப்பட்டிருந்ததுடன் உரிய உடன்படிக்கைகளின் பிரகாரம் நிதிஏற்பாடு ஆராய்ச்சி மீளாய்வின் பின்னர் இந்த ஆண்டின் போது பகுதியாகச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே 8 சதவீதம் முதல் 34 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்களும், பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 33 சதவீதம் முதல் | ஏற்றுக்கொள்ளப படுகின்றது. | பாதீடு தயாரிக்கும் போது முரண்களை இயலுமான அளவில் குறைப்பதற்குரிய வகையில் தயாரிக்கப்பட |

| | | |
|---|---|---|
| 96 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்களும் அவதானிக்கப்பட்டதுடன் பாதீட்டில் உள்ளடக்கப்படாத ரூபா 20,397,633 பெறுமதியான 11 செலவின விடயங்களும் காணப்பட்டன. இதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | வேண்டியதுடன் பாதீடு கட்டுப்பாட்டை கருவியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.3 நிலையான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தொலைத்தொடர்பு தகவல் தொழில்நுட்ப மேம்படுத்தலுக்காக 2030 வரையில் அனைத்து கிராமிய பிரதேசத்திலும் தொலைத்தொடர்பு செயற்பாடுகளை மேவுகை செய்யும் இலக்கை அடைந்துகொள்ளும் போது உரிய பணிகளை ஒழுங்கமைப்பதற்காக தேவையான கட்டங்களை வெளிப்படுத்துதல் போதியளவில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் விரிவான செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டம் ‘‘கிராமத்திற்கு தொடர்பாடல்’’ என்ற பெயரில் பெயரிடப்பட்டுள்ளது. சேவைப் பங்களிப்பு கம்பனி மற்றும் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் மூலம் எதிர்காலத்தில் அந்த பிரதேசங்களில் காணப்படுகின்ற இந்த தொடர்படல் இடைவெளியை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | தேவையான கட்டங்களை மேவுகை செய்தல் போதியளவில் சரியாக இனங்காணப்பட வேண்டும். |